# வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா நடைமுறைப்படுத்தி வரும் பரிகாரக் கற்பித்தல் செயற்திட்டம்!

எமது கல்லூரியில் ஆறாம் வகுப்பில் சேர விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களும் அனுமதிக்கப்படுகின்றார்கள். இவ்வாறு விண்ணப்பித்து அனுமதி பெறும் மாணவர்கள் தரம்1 தொடக்கம் தரம்5 வரையான ஆரம்பப் பாடசாலைகளில் இருந்தும் தரம்1 தொடக்கம் தரம்11 வரையான இடைநிலைப் பாடசாலைகளில் இருந்தும் வருபவராவர். அவ்வாறு இடைநிலைப் பாடசாலைகளில் இருந்து வரும் மாணவர்களில் புலமைப்பரிசில் பரீட்சையில் கூடிய புள்ளிகளை எடுத்த மாணவர்களுக்கு அப்பாடசாலைகள் எமது கல்லூரிக்கு அனுமதி பெறுவதற்கு விடுகைப் பத்திரம் வழங்குவதில்லை. பெரும்பாலும் புலமைப்பரிசில் பரீட்சையில் குறைந்த புள்ளிகள் பெறும் மாணவர்கள் தான் எமது கல்லூரிக்கு இடைநிலைப் பாடசாலைகளில் இருந்து வந்து அனுமதி பெறுகின்றார்கள்.

பொதுவாகத் தீவுப்பகுதியில் சனத் தொகை ஐதாக்கத்தின் காரணமாக மாணவர் எண்ணிக்கை குறைவாகவுள்ளது மட்டுமல்ல சராசரிக் குடும்ப வருமானம் குறைந்த மக்களே அங்கு வாழும் நிலைமையே தற்போதய யதார்த்தமாகும். எனவே அனைத்து மாணவர்களுக்கும் அடிப்படைக் கல்வியறிவை வழங்குமுகமாகவும் எமது கல்லூரியில் மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்குடனும் அனுமதிக்காக விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் அனுமதி வழங்கப்படுகின்றது.

இவ்வாறு அனுமதி பெறும் மாணவர்களில் 45 வீதமான மாணவர்கள் அடிப்படை எண்ணறிவு மற்றும் எழுத்தறிவில் மிகவும் பின்தங்கியவர்களாக இருக்கின்றார்கள். இச்சதவீதமான மாணவர்களது எழுத்தறிவு மற்றும் கணித அறிவினை மேம்படுத்துவது வழமையான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் மூலம் அசாத்தியமானதாகும். ,தற்காக வளர்ச்சியடைந்த நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படும் பரிகாரக் கற்பித்தல் செயன்முறையைப் பின்பற்றி விசேட வகுப்புக்களையும் தற்காலிக ஆசிரியர்களையும் ஒழுங்குசெய்து அடிப்படைக் கல்வியில் பின்தங்கிய மாணவர்களின் அறிவுத்திறனை வளர்த்துப் பின்னர் வழமையான வகுப்புக்களில் சேர்ப்பதே உகந்த பரிகாரமும் சிறந்த வழிகாட்டலுமாகும்.

இவ்வாறான மாணவர்கள் ஒவ்வொரு வகுப்பிலும் தொடர்ச்சியாகக் காணப்படுவதாகவும் இவர்களுக்கான விசேட பரிகார கற்றல் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எங்கள் அமைப்பு ஊக்குவிப்பையும் நிதியுதவியையும் வழங்க வேண்டும் என்று அதிபர் திரு. சி. கிருபாகரன் அவர்கள் விடுத்த வேண்டுகோள் எமது நிர்வாக சபைக் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டது.

அதன் விளை வாக இத்திட்டத்தை முதற் கட்டமாக தரம்6, தரம்7 தரம்8, தரம்9, தரம்10, தரம்11 வகுப்புக்களிலுள்ள மாணவர்களுக்கு தமிழ், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்குச் செயற்படுத்து வதற்கு நிதியுதவியளிப்பது அர்த்த முள்ள செயற்பாடு எனத் தீர்மானித்து 2013ம் ஆண்டிற்கான முதலாம் தவணைப் பரீட்சைப் புள்ளிகளை பகுப்பாய்வு செய்ததன் மூலம் இச் செயற்றிட்டத்தில் உள்வாங்கப்படும் மாணவர் விபரமும் மாதாந்த செலவு மதிப்பீடும் கணக்கிடப்பட்டு ஏப்ரல் 27, 2013 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்திற்கு மாதம் ஒன்றிற்குச் சராசரியாக 24, 000.00 ரூபாக்கள் வீதம் மாதாமாதம் வழங்கி வரு கின்றோம். இத்திட்டம் தொடங்கிய ஏப்ரல்-2013 இலிருந்து ஏப்ரல்- 2016 வரை மொத்தம் 8, 029.00 டொலர்கள் வழங்கப்பட்டுள்ளது. இச்செயற்திட்டமானது எமது சங்கத்தால் நடை முறைப் படுத்தப்படும் நான்காவது நீண்டகாலச் செயற்திட்டம் என்பதுடன் தற்போது நடைமுறையிலுள்ள மூன்றாவது செயற்திட்டம் என்பது குறிப்பிடத் தக்கது.





**'உள்ளம் விரிந்தால் உலகமே சொந்தம்'**

**சி.இளஞ்செழியன் (தலைவர்)**

**வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்-கனடா**

பிற்குறிப்பு: சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் யூலை மாதம் 31ம் திகதி நடைபெறவுள்ளது. விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.